Registered as a Newspaper in Ceylon

அலை சதம் 10

# ஈழநாடு

# EELA NADU



30 வருட நற்சேவையினுல் மக்களின்
அமோக ஆதரவை பெற்றவர்
எம். எஸ். எம். ஜுனைட்
(மூக்குக்கண்ணுடி தயாரிப்பாளர்)
144, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 [illegible] குரோத கார்த்திகை 27 ஆம் நாள் ஷஃபான் பிறை 7 12 12-[illegible] சனிக்கிழமை இதழ் 303

சுதந்திர

# இலங்கையில் தமிழர் உரிமை மறுக்கப்படுகிறது

## மனித உரிமைகள் தின கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி.

சாவகச்சேரி, வெள்ளி

"பதினறு வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்ட ஐ. நா. மனித உரிமைகளை இலங்கை அரசாங்கம் மீறுகிறது. சுதந்திரமடைந்த இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன."

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பருத்தித்துறை ரோட்டரிச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற மனித உரிமைகள் தினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"ஐ. நா. கொள்கைத் திட்டத்தின்படி பிரகடனம்செய்யப்பட்ட மனித உரிமைகள் சாசனத்தின் எந்தப் பகுதியேனும் அங்கத்துவ நாடுகள் எதிலும் மீறப்பட்டால் சாஸனத்தின் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கமுடியும். ஆனல் இதுபற்றி அவர்களிடம் புகார்செய்யும் முறையிலேயே நடவடிக்கைகள் தங்கியிருக்கிற" என்று திரு. நவரத்தினம் கூறினர்.

இலங்கைவாழ் தமிழர்களின் நிலைபற்றி தமிழர்களே ஐ. நா. ஸ்தாபனத்துக்குப் புகார்செய்தால் அந்தப் புகாரின் ஒரு பிரதியை இலங்கை அரசாங்கத்துக்கு அது அனுப்பிவைக்கும். இதற்கு அரசாங்கம் விரும்பினால் பதிலளிக்கலாம் அல்லது விடலாம். தமிழர்களின் நிலைபற்றி ஐ. நா. வில் உள்ள வேறு அங்கத்துவ நாடுகள் எதுவும் புகார்செய்தால் அது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று திரு நவரத்தினம் மேலும் கூறினர்.

இக்கூட்டத்திற்கு திரு [illegible] தலைமை வகித்தார்.

## இலங்கை—இந்திய கிரிக்கெட் போட்டி

### சர்தேசாய் செஞ்சரி அடித்தார்

பெங்களூர், டிச. 11

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இங்கு நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் முதல் நாளான இன்று இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இந்தியா 2 விக்கெட் நஷ்டத்திற்கு 321 ரன் எடுத்தது. சர்தேசாய் 126 ரன்கள் எடுத்து அவுட்டானர்.

இடைவேளைக்குப் பின் இலங்கையின் பந்து வீச்சு திறமையாய் இருந்தது. இந்தியா 130 ரன்களை எடுத்தபோது 72 ரன்கள் எடுத்திருந்த ஜெயசிம்மா அவுட்டானர். சர்தேசாய் 'செஞ்சரி' எடுத்தவுடன் ரசிகர்கள் கூட்டம் மைதானத்தை நோக்கி ஓடிவந்ததால் அவர்களைக் கலைக்க பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டிவந்தது. இதனல் சர்தேசாய்க்கும் காயம் ஏற்பட்டது.

## சுந்தரலிங்கம் கட்சி சகலதொகுதிகளிலும் போட்டி

வவுனியா, வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல தேர்தல் தொகுதிகளிலும் தமது கட்சி சார்பில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அபேட்சகர்களை நிறுத்தப்போவதாக ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவரும், முன்னள் வவுனியா எம். பி.யுமான திரு. ஸி. சுந்தரலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

சிங்களவர்கள் யாராவது இத்தொகுதிகளில் போட்டியிடுவார்களேயானல் அவர்களுக்கு போட்டியாக அத்தொகுதிகளில் போட்டியிடும் மற்றைய தமிழ்க் கட்சியைச் சேர்ந்தவர்களுடனே அல்லது அபேட்சகருடனே போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொள்வோமென்றும் அவர் சொன்னர்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் தமது கட்சிக்கு ஆதரவு தேடும்பொருட்டுச் சகல தொகுதிகளிலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்த இருப்பதாகவும் திரு. சுந்தரலிங்கம் கூறினர்.

## இன்று அட்டனில் இலங்கை தொழிலாளர் கழகமகாநாடு

அட்டன், வெள்ளி

நாட்டின் தேசிய ஒற்றுமையைக்கருதி தமிழ்மொழி மூலம் நடவடிக்கைகளை உடனடியாக சிங்கள மொழியுடன் சம அந்தஸ்துள்ள அரசாங்க மொழியாக தமிழ்மொழி ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கை அட்டனில் நாளை ஆரம்பமாகும் இலங்கை தொழிலாளர் கழகத்தின் முதலாவது மகாநாட்டில் கொண்டுவரப்படும்.

இலங்கை தொழிலாளர் கழகத்தின் முதலாவது மகாநாடு நாளை சனிக்கிழமை அட்டனில் ஆரம்பமாகும். இம் மகாநாட்டில் வாலிபமுன்னணி உறுப்பினர்கள், தோட்டக்குழு மாவட்ட குழு பிற முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

நாளை நடைபெறவிருக்கும் பிரதிநிதிகள் மகாநாட்டில் குறைந்தது ஆயிரம் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இப் பிரதிநிதிகள் மகாநாடு நாளை காலை 9 மணிக்கு அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகும். இம் மகாநாட்டில் புதுவருட செயற்குழு தெரிவுசெய்யப்படும்.

13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டன் பார் மைதானத்தில் காலை 10-30 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும். இப் பொதுக் கூட்டத்திற்கு முன்னர் அட்டன் பிறின்சஸ் டமானிகைச் சந்தியிலிருந்து காலை 9-30 மணிக்கு தொழிலாளர்களின் பிரமாண்டமான ஊர்வலம் ஆரம்பமாகும்.

இலங்கையின் இதர குடிகள்

(5-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமானற்றில் இருவரும் படகுகளும் கைது

### கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகம்

மாவிட்டபுரம், வெள்ளி

கள்ளக் கடத்தலில் ஈடுபட்டதாக தொண்டமானற்றைச் சேர்ந்த இருவர் நேற்றிரவு சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டனர். 2500 ரூபாய் பெறுமதியான இயந்திரப் படகும் ஆயிரம் ரூபாய் பெறுமதியான கட்டுமரம் ஒன்றும் தடுக்கப்பட்டுள்ளது.

இயந்திரப் படகிலும் கட்டுமரத்திலும் இருந்ததாகக் கூறப்படும் கைலோன் வலைகள், நைலோன் வலைகள் நைலோன் சேட்டுகள் ஆகியவைகளும், 14 பாக்கு மூடைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பலாலி ராணுவ முகாமைச் சேர்ந்த ராணுவச் சிப்பாய்களின் கோஷ்டியொன்று நேற்று நள்ளிரவில் தொண்டமானற்று கடற்கரையில் இவ்விரு படகுகளையும் சந்தேகத்தின் மீது சோதனை போட்டதாகவும் அப்பொழுது இப்பொருட்கள் காணப்பட்டதாகவும் இதன் பின் பொலிசாருக்குத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

படகுகளும் படகுகளிலிருந்த பொருட்கள் பற்றியும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் இன்று விசாரணை நடத்தினர். தொண்டமானற்றைச் சேர்ந்த சிவகுரு தங்கவேலுவும், தில்லையம்பலம் பழனிவேலும் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## தேசிய கூவிப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய கூவிப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
16 B 0690 ரூ. 50,000

இரண்டாவது பரிசு
20 P 0731 ரூ. 16000

மூன்ருவது பரிசு
01 Q 0377 ரூ. 6410

தலா ரூபா 400 பெறும் டிக்கட்டுகள் வருமாறு-

(2 ம் பக்கம் பார்க்க)

## 'மிகப் பெரிய தவறு'

வாஷிங்டன், டிச 11

'இனப்பாகுபாடு காட்டி வந்தது மிகப் பெரிய தவறு' என அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்ஸன் தெரிவித்துள்ளார். நீக்ரோக்களை பூரணமாக ஒருமைப்படுத்துதல் அமெரிக்க மக்களின் கடமையென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பீடித் தொழிலுக்கு ரூ. 12 லட்சம் மூலப்பொருள்

கொழும்பு, வெள்ளி

பீடிக் கைத்தொழிலுக்குத் தேவையான ரூபா 12 லட்சம் பெறுமதியான மூலப்பொருள்கள் இலங்கைக்கு வந்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பீடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவை விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திரமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## மணிவாக்கு

ஞானிக்கும் சாதாரண மனிதனுக்குமுள்ள வேற்றுமையென்ன? ஞானிக்குத்தானே கடவுளென்று தெரியும். மற்றவருக்கு அது தெரியாது. தானே தெய்வமென்பது ஒருமனிதன் உணரும்போது அவன் ஞானியாகிறான்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone; 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு கார்த்திகை மீ 27 உ (12-12-64)


## ஒரு தவறு நீக்கப்பட்டது

ஒரு பெரிய தவறை இலங்கை அரசாங்கம் இப்போது நீக்கிக்கொள்ள முன்வந்துள்ளது. கைத்தொழில் வர்த்தக ஸ்தாபனங்களிலே இலங்கையரல்லாதார் யாரும் டிசம்பர் 31-ம் திகதிக்குப் பின் வேலை செய்வதாயின் அந்த ஸ்தாபனங்களுக்கு இறக்குமதி லைசென்ஸ் முதலிய உரிமைகள் மறுக்கப்பட்டு விடுமென்று முன்பின் யோசியாமல் ஓர் உத்தரவைப் பிறப்பித்தனர். இதன் பயனாக பல தொழில் வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை பார்த்தவர்களில் பலர் வேலை இழந்து தவிக்க நேரிட்டது. இந்தியர் மட்டுமல்ல. பிரஜா உரிமையை நிரூபிக்க முடியாத இலங்கைத் தமிழரில் பலரும் இதனால் பாதிக்கப்பட்டனர். இந்த உத்தரவை அரசாங்கம் இப்போது நீக்கியதால் சம்பந்தப்பட்ட மக்களுக்குச் செய்யப்பட்ட அநீதியும் தவிர்க்கப்படும். அந்த மட்டில் வரவேற்கத் தக்கதே.

இந்த உத்தரவை இலங்கை அரசாங்கம் வாபஸ் பெற்றதற்கு முக்கிய காரணம் இந்திய அரசாங்கம் ஆட்சேபித்ததுதான் இவ்வுத்தரவு டில்லியில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு மாறானதுமென்றும் இந்தியா எடுத்துக் காட்டியது. 15 ஆண்டுகளில் படிப்படியாக இங்கிருந்து இந்திய வம்சாவளியினர் செல்லலாமென்று ஒப்பந்தம் கூறுகையில், இலங்கை எடுத்த நடவடிக்கையால், சம்பந்தப்பட்ட மக்களில் பலர் வேலை இழந்து தவிப்பதாயும் அவர்களை உடனடியாக நாடு கடத்த மறைமுகமாக நிர்ப்பந்திப்பதாகவே இந்த உத்தரவு இருப்பதாயும் இந்தியா சுட்டிக் காட்டியது. இதன் பயனாகவே இலங்கை அவ்வுத்தரவை வாபஸ் பெற்றுக் கொண்டது. டில்லி ஒப்பந்தம் இல்லாதிருப்பின், குறித்த மக்கள் வேலை இழந்திருப்பர். இதையெல்லாம் உணர்ந்தே டில்லியும் இவ்வத ஒப்பந்தத்துக்குச் சம்மதித்தது போலும்.

ஒரு நாட்டின் வர்த்தகமும் கைத்தொழிலும் அந்நாட்டு மக்களின் கையிலேயே இருக்க வேண்டுமென்பது சரியே. ஆனால் இதற்கான நடவடிக்கைகள் மனித நீதிக்கு உதவுவதாக இருக்க வேண்டும். ஏற்

## திருக்கேதீச்சரத்தில் சிரமதானம்

கொழும்பு, வெள்ளி

திருக்கேதீச்சரத்தில் இம்மாதம் ஒரு சிரமதான இயக்கத்தை நடத்த கொழும்பு இந்து வாலிபர் சங்கம் தீர்மானித்துள்ளது. சென்ற ஆண்டு போலல்லாது இவ்வாண்டு திருவெம்பாவை நாட்களின் இறுதியில் சிரமதானம் ஆரம்பமாகும்.

சிரமதானம் மூலம் இச்சங்கம் செய்யவிருக்கும் முக்கிய பணி கோவிலைச் சுற்றி வளர்ந்திருக்கும் செடிகளை அகற்றுவதே. இலங்கையின் பல பாகங்களிலிருக்கும் சைவர்கள் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்வதற்கும், சங்கங்களிடையே நல்லுறவு வளர்வதற்கும் இவ்வியக்கம் உதவியாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

## புதிய சயிக்கிள்கள் வழங்கப்படும்

கொழும்பு, வெள்ளி

விரைவில் நூறு சயிக்கிள்களை வழங்குவதற்கு திறைசேரி மூலம் நடவடிக்கை எடுப்பதாக அகில இலங்கை தபால், தந்தி ஊழியர்களின் தூதுகோஷ்டியிடம் தபால் மந்திரி திரு. ஆர். எஸ். பெல்பொல தெரிவித்தார்.

தபால் ஸ்ரோரில் ஏராளமான பாவிக்கப்படாத சயிக்கிள்கள் இருப்பதாக இத் தூதுகோஷ்டி மந்திரியிடம் தெரிவித்தது.

## ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி

295 அப்போதிக்கரிமார் மார்களில் நூற்றைம்பது பேருக்கு வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவு குறித்து ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள்.

இடமாற்ற சபை ஒன்றை நியமிக்காததன் காரணமாகவே இந்த இடமாற்றங்களை ஆட்சேபிப்பதாக அரசாங்க அப்போதிக்கரிமார் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

எனவே வேலையிலுள்ளவர்களுக்குத் திடீரெனப் பிழைப்பை மறுத்து நடுத்தெருவில் தவிக்க விடுவதாயின் அது பாவமாகும். டில்லி ஒப்பந்தம் அப்பாவத்தைத் தற்காலிகமாகவாவது தடுக்க முடிந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இரு அரசாங்கங்களுக்கும் விரும்பத் தக்க நல்லுறவு இருப்பது இருசாராரும் பரஸ்பரம் கலந்து பேசிக் காரியம் செய்ய முற்பட்டுள்ளதிலிருந்து தெரிகிறது. சமீப காலமாக இந்திய வம்சாவளியினருக்கு இங்குள்ள சங்கடங்கள் கொஞ்சமன்று. திடீர் திடீரென்று அவர்கள் சந்தேகிக்கப்பட்டு இராணுவத்தால் பிடித்துக் கொண்டு போகப்படுகின்றனர். கும்பெனித்தெரு, தலைமன்னார் முதலிய முகாம்களிலுள்ள நிலைமை மீண்டும் மிக மோசமாகியுள்ளதாகப் புகார்கள் கிடைக்கின்றன. டில்லி ஒப்பந்தத்திலே, சட்டவிரோத குடியேற்றக்காரர், விஸா காலத்தை மீறி வசிப்பவர்கள் விஷயங்கள் அடங்கவில்லைதான் என்றாலும் ஒருபாவமும் அறியாத இலங்கையரும்கூட இம்சிக்கப்படுவதும் முகாம்களிலே அம்மக்கள் சிறைக் கைதிகளைவிட மோசமாக நடத்தப்படுவதும் இரு நாடுகளுக்கும் பெருமையளிக்க முடியாது. மாதக்கணக்கில் பலர் அடைபட்டுத் தவிக்கின்றார்கள். இத்துரதிர்ஷ்ட மக்கள் விஷயத்தையும் பிரயாணத்தடை விஷயத்தையும் இவ்விரு அண்டை நாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைத்து இக்குறைகளை நீக்க உடன் முன்வரவேண்டும். அப்படிச் செய்வதால், மனித நீதிக்கு மாறாகச் செய்யப்படும் பல இம்சைகள் குறையவும், இருதேச நல்லுறவும் வளர்ந்து மேலும் பல துறைகளிலும் பரஸ்பர நன்மைக்கான முறையிலே ஒத்துழைக்கவும் வழி பிறக்கும்.

# 6 மாதங்களாகியும் மணிஆர்டர் இன்னும் கிடைக்கவில்லை!

யாழ்ப்பாணம், வெள்ளி

கீரிமலையிலிருந்து இவ்வாண்டு ஜூன் மாதம் 22-ந் திகதி அனுப்பப்பட்ட ரூபா 50 கொண்ட மணி ஆர்டர் இன்னும் விலாசதாரரிடம் சேரவில்லை.

கீரிமலையைச் சேர்ந்த திரு. ஐ. அரியபுத்திரன் என்பவர் கரவெட்டி, துன்னாலை வடக்கைச் சேர்ந்த திரு. வே. கணபதிப்பிள்ளை என்பவருக்கு 862-ம் இலக்கத்தைக் கொண்ட இந்த மணிஆர்டரை அனுப்பினார்.

அனுப்பியவர் இதுபற்றி தபால் அதிகாரிகளுக்கு பல தடவை முறைப்பாடு செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும் அனுப்பியவருக்கோ அல்லது அனுப்பப்பட்டவருக்கோ இந்தப் பணம் இன்னும் கிடைக்கவில்லை என்றும் தெரிகிறது.

# நாட்டிலும் நகரிலும்

'சிங்கர் ஐயா' மறைந்து போய்விட்டார் என்ற செய்தி அவருடைய கணக்கற்ற பழைய மாணவர்களுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். திரு. வி. வீரசிங்கம், முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி., யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கத்தைப் பரப்புவதற்கு மூலகாரணமாய் இருந்தவர். கிட்டத்தட்ட 30 வருடங்கள் கல்வித்துறையில் ஈடுபட்டு, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இணையற்ற பிரின்சிபலாக விளங்கியவர். அவருக்கு அந்நாட்களில் 'சிங்கநாயகம்' என்ற பெயரும் இருந்தது. ஆகவே அவரை செல்லமாகவும் ஆனால் அளவு கடந்த பயபக்தியோடும் 'சிங்கர்ஐயா' என்று குறிப்பிடலாம்.

அவர் ஒழுக்கத்தின் சின்னமாகவும் கட்டுப்பாட்டின் காவலனாகவும் கல்வியின் அணிகலனாகவும் இருந்த இன்றுபெரும் பெரும் பதவிகளில் இருக்கும் எத்தனையோ 'மாணவர்களை' நன்னிலைக்குக் கொண்டு வந்தவர். 'கிறீச்' வெட்டிய சிகையுடன் கையில் பிரம்பொன்றுடன் கொண்டு அவர் சுற்றிவரும் வகுப்புகளைச் சுற்றி [illegible] விட்டுக் கொண்டு வரும்போது மாணவர்கள் மட்டுமா, ஆசிரியர்களுமே கட்டுண்ட பாம்புகள்போல் அடங்கிவிடுவார்கள். அவருடைய பிரம்படி இன்றைக்கும் பலருக்கு உறைத்துக் கொண்டிருக்கும். ஆனால் அதில் துவேஷமோ குரோதமோ இருக்கமாட்டாது. நன்றியறிதல்தான் இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் அவர் பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவது ஓர் அலாதியான காட்சி. நடராஜத் திருவுருவத்தின் முன் மாணவர்கள் எல்லோரும் அமைதியாக நின்று கொண்டிருப்போம். ஆசிரியர்களில் ஒரு பிராமணரோ அல்லது ஒரு சைவசீலரோ தேங்காய் உடைத்துக் கற்பூர ஆராதனை செய்வார். மாணவர்களில் ஒருவர் தேவாரம் பாடவேண்டும். பூசை முடிந்ததும் எங்களைத் தரையில் உட்கார வைத்து அவர் ஒரு பிரசங்கம் செய்வார். அது வெறும் பிதற்றலாயிராது. கல்வி, ஒழுக்கம், சைவம் ஆதியவைபற்றி மணியான கருத்துக்கள் அதில் உதிரும். பிரசங்கம் முடிந்தவுடனே எல்லோரும் எழுந்து நிற்போம். 'சிங்கம் ஐயா' வேறொன்றும் வேண்டேன் நின்றாய் போற்றி என்று தொடங்கும் அப்பர் சுவாமிகளின் திருக்கைலாயப் பதிகத்தை வார்த்தை வார்த்தையாக அழகாக உச்சரித்து வாசிப்பார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இதே பாடல்தான். இன்று அவர் கைலாயபிராப்தி அடைந்துவிட்டாலும் அவருடைய நினைவு எங்கள் மனத்தைவிட்டு ஒருபோதும் அகலமாட்டாது.

மந்திரிப் பதவியைத் துறந்துவிட்ட திரு. சி. பி. டி' சில்வா கதிர்காமத்துக்குச் சென்று வழிபட்டாராம். முருகக் கடவுள் ஒரு யுத்தக் கடவுள்தான். ஆனபடியால் தானோ சில நாட்களுக்கு முன்பு அவருக்கு அல்லக்கன்சாந்தசுவாமி' என்ற ஒரு புதிய நாமமும் சூட்டப்பட்டது! வல்லசுரர்களை அழித்த குமாரசுவாமிக் தெய்வத்தை வெற்றி வேண்டும்போது மட்டும் வணங்குவது இக்காலத்தில் மட்டுமல்ல, சில ஆயிரம் வருடங்களுக்கு முன்பும் ஒரு வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. முதன் முதலில் துட்டகைமுனு என்ற அரசன் எலாளனைத் தோற்கடிப்பதற்காகக் கதிர்காமத்தில் சென்று வழிபட்டவனும் அன்று முதல் இடர் வந்துள்ள காலையில் அவரைப் போய் சரண் புகுவது ஒரு வழக்கமாய்ப் போய்விட்டது. முருகன் இதைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டிருப்பாரோ நாம் அறியோம்! ஆனால் இரு போட்டிக்கட்சிகளும் வழிபடும்போது அவர் யாருக்கு ஆதரவளிப்பார்?

களவு முதலிய தீச்செயல்களில் ஈடுபடுபவனும் கடவுளை வணங்குகிறான் பணக்காரனும் அவரை வந்திக்கிறான் ஒன்றுமில்லாத ஏழை தரித்திரனும் அவரின் கிருபையை நாடுகிறான், சண்டைக்குப் போகிறவனும் அவர் தயவை நாடுகிறான், சண்டையில் தோற்றவனும் அவருடைய கடாட்சத்தை [illegible] விழைகின்றான் ஐயோ முருகா!

வழிப் பாக்கன்

## தேசிய கவிப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 03 U 0651 | 18 H 0819 | 17 R 0403 |
| 20 W 0111 | 15 N 0085 | 16 P 0801 |
| 17 B 0436 | 15 N 0652 | 02 Q 0325 |
| 06 Y 0973 | 23 S 0323 | 01 O 0144 |
| 09 O 0818 | 06 T 0972 | 20 X 0808 |
| 08 A 0435 | 22 P 009[illegible] | 17 Z 0039 |
| 10 G 0128 | 04 T 0383 | 13 K 0773 |
| 10 E 0267 | 11 S 0708 | 01 M 0894 |
| 09 U 0074 | 18 G 0925 | 02 Z 0833 |
| 16 U 0098 | 14 M 0237 | 03 M 0859 |
| 21 G 0728 | 14 M 0092 | 22 L 0430 |
| 05 D 0164 | 08 O 0680 | 12 P 0385 |
| 17 A 0512 | 14 A 0969 | 11 D 0022 |
| 12 E 0842 | 12 H 0842 | 03 Q 0176 |
| 13 V 0935 | 22 P 0592 | 01 E 0575 |
| 08 J 0765 | 12 E 0175 | 05 E 0486 |
| 06 Z 0033 | 03 U 0275 | 02 Q 0031 |
| 17 Y 0326 | 18 Q 0741 | 18 M 0103 |
| 10 Y 0650 | 21 R 0318 | 16 N 0222 |
| 10 U 0303 | 05 H 0243 | 12 T 0710 |
| 23 M 0602 | 02 T 0209 | 07 Z 0729 |
| 03 A 0375 | 06 X 0544 | 06 N 0004 |
| 16 V 0634 | 24 E 0111 | |
| 20 Y 08[illegible]9 | 19 O 0511 | 10 G 0973 |
| 02 W 0742 | 20 P 0549 | 04 W 0962 |
| 10 P 0399 | 05 H 0288 | 18 P 0632 |
| 03 G 0132 | 15 Z 0673 | 11 C 0708 |
| 08 Y 0623 | 04 Y 0131 | 16 Q 0783 |
| 07 B 0539 | 22 X 0600 | 18 F 0222 |
| 10 J 0505 | 03 M 0709 | 06 S 0542 |
| 07 G 0297 | 18 X 0270 | 12 K 0514 |
| 05 G 0949 | 08 A 0127 | 16 P 0308 |
| 07 S 0688 | 22 U 0020 | 05 X 0350 |
| 04 N 0789 | 08 N 0453 | |

## "வேறுபந்தத்..

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடப்போவதாகக் கூறப்படுவது உண்மைதானா என்றும் அவர்கள் கேட்டனர்.

இதுபற்றி பின்னர் அறிவிப்பதாக எம். பி. கூறியும், உடனடியாக அறிவிக்கும்படியும் அல்லது அவரின் வீட்டின் முன் சத்தியாக்கிரகம் இருக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன் பின் திரு நவரத்தினம், தான் சாவகச்சேரித் தொகுதியைத் தவிர வேறு தொகுதியில் போட்டியிடப் போவதில்லையென வாக்குறுதியளித்தார். இதன் பின் ஆதரவாளர்கள் கலைந்துசென்றார்கள்

## ஐயாறன் எழுதுவது

காலையில் ஒரு படித்த அன்பர் வந்தார். இங்கு இப்போதுள்ள அரசியல் நிலையைப்பற்றி என் கருத்தென்னவென்றும், எந்தக் கட்சியை ஆதரிக்கிறேனென்றும் கேட்டு என் வாயைப் பிடுங்கினார்.

கடப்பதெல்லாம் நன்மைக்கே என்றும், இதைத் தவிர எந்தப் பக்கமும் என் மனம் சாயவில்லை என்றும் கூறிவிட்டு, அன்பரின் கருத்தைக் கேட்டேன். அவர் எரிமலையைப் போல் மளமளவென்று பல கருத்துக்களையும் கக்கினார்.

எட்மண்ட் சமரக்கொடியின் போர்டை தாம் ஆதரிப்பதாயும் அவரது ஆதரவாளர் ஒருவரையாவது வடக்கு, கிழக்கு பகுதியிலிருந்து போட்டியில்லாமல் தெரிவு செய்து அனுப்பினால் பல விதங்களிலும் நல்லதாக இருக்குமென்றும் சொன்னார். இத்தேர்தலில் அன்பர் போட்டியிட உத்தேசமா என்று கேட்டதற்கு அப்படியெதுவுமில்லை என்று மறுத்தார்

* * *

சமரக்கொடி நேர்மையானவர். துணிச்சல் மிக்கவர். ஏற்கெனவே வகுப்புக் கலவரம் ஏற்பட்ட காலத்தில் தமிழ் மக்களுக்காக அவர் பார்லிமெண்டிலே பரிந்து பேசியதை என்றும் மறக்க முடியாது. மலைநாட்டுத் தமிழருக்காக அவரைப் போல் துணிச்சலுடன் பேசக்கூடிய சிங்களவர் யாருமில்லை.

ஆனாலும் தமக்குப் பார்லிமெண்ட ஜனநாயக முறையில் எவ்வித நம்பிக்கையுமில்லை என்றும் புரட்சி வழியால்தான் விமோசனம் பிறக்க முடியுமென்றும் அவர் கூறுகிறார். பார்லிமெண்ட ஜனநாயக முறையில் நம்பிக்கையில்லாத ஒருவர் தேர்தலில் போட்டியிடும் காரணத்தைக் கேட்டேன். பார்லிமெண்டிலிருந்து [illegible] தம் கருத்துக்களை வெளியிட்டால்தானே அவை பத்திரிகைகளில் பிரசுரமாகவும் பிறர் கவனிக்கவும் முடியுமென்றும், பார்லிமெண்ட் சபையை ஒரு பிரசார மேடையாகப் பயன்படுத்துவதே அவரது நோக்கமாக இருக்கலாமென்றும் தெரிவித்தார் அன்பர்.

* * *

ஜி ஜி, சுந்தரலிங்கத்தார் முதலிய பழைய வீரர்களையும் இவ்விதமே போட்டியின்றி அனுப்ப வேண்டுமென்றார். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எந்தத் தொகுதியிலும் ஒருவராவது போட்டியில்லாமல் வர முடியுமா?

தென் இலங்கையிலே போட்டியைத் தவிர்க்கும் பல ஒப்பந்தங்கள் செய்யப்படுவதாக செய்திகள் கூறுகின்றன. சிம்மாசனப் பிரசங்கத்துக்கு மாறாக வாக்களித்த 74 பேர்களும் பல நேர்மாறான கருத்துள்ளவர்கள், என்றாலும் அவர்களுக்குள்ளாக எவ்வித போட்டியுமிராதென்றும் யு. என் பி. சி. பி. டி' சில்வா, பிலிப், கே. எம். பி முதலியவர்கள் போட்டியில்லா ஒப்பந்தம் செய்து கொண்டு தேர்தலில் ஒத்துழைப்பரென்றும் அன்பர் கூறி அவ்வித ஒரு புதிய ஒத்துழைப்பு தமிழ்த் தலைவர்களிடையிலும் ஏற்பட வேண்டுமென்றார்.

ஆனால்.........

* * *

சாதிகுலப் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும், ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு, பேதைகுணம் பிறர் உருவம் யான் எனதென் உரைமாய்த்துக், கோதில் அமுதானானைக் குலாவுதில்லைக் கண்டேனே.

—ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

# அணு, ஆயுத மற்றநாடுகளின் பாதுகாப்பு பிரச்னை

## வல்லரசுகள் பரிசீலிக்க வேண்டும் என்கிறார் சாஸ்திரி

புதுடில்லி, டிச 1/ அமெரிக்கா, ரஷ்ய ஆகிய இருவல்லரசுகளும் அணு ஆயுத மற்ற நாடுகளின் பாதுகாப்பு பற்றி பரிசீலிக்க வேண்டும் எனத் தாம் லண்டனில் இருக்கும்போது யோசனை கூறியதாய் பிரதமமந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சியில் கூறினார்.

ஆனால் பாரதம், அணு பாதுகாப்புக் கோரும் பிரச்னையே எழவில்லை என்றும் அவர் கூறினார்.

பாரதம் அணு ஆயுத உற்பத்தியில் இறங்காது என்ற முடிவை பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன் பாராட்டியதாயும் சாஸ்திரி தெரிவித்தார்.

அணு ஆயுதங்களுக்கு எதிராக உலக அபிப்பிராயத்தை திரட்ட வேண்டும் என்றும், அணு ஆயுதப் போட்டியில் இந்தியா இறங்காது என்றும் சாஸ்திரி குறிப்பிட்டார்.

இந்தியாவின் மண்டலசார்பற்ற கொள்கையை திரு வில்சன் பாராட்டினார் என்றும் இந்தக் கொள்கையே கொரியாவில் யுத்தநிறுத்தத்துக்கு வழி செய்தது எனறும் வில்சன் கூறியதாக சாஸ்திரி தெரிவித்தார்.

பாகிஸ்தான் விரும்பினால் அந்த நாட்டுடன் போரில்லாக் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளத் தயாராய் இருப்பதாயும், ஆனால் பாகிஸ்தானுக்கு இது விருப்பமில்லை என்றும் சாஸ்திரி மேலும் தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் மாணவர் கிளர்ச்சி பரவுகிறது

## 140 க்கு மேற்பட்டோர் கைது

கராச்சி, டிச 11 கராச்சியில் இன்று கல்லூரிக்கருகில் தடைஉத்தரவை மீறி மாணவர்கள் கூட்டம் நடத்தியதைத் தொடர்ந்து 100-க்கு மேற்பட்ட மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அதற்குமுன் கூட்டத்தைக் கலைக்க தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. பலர் அதன் விளைவாகக் காயமடைந்தனர்.

கராச்சியில் இன்று முழு ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி மாணவர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த 10 தினங்களாக நடைபெற்றுவரும் மாணவர் வேலைநிறுத்தம் நாட்டின் இதர பகுதிகளுக்கும் பரவியிருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தானில் கவர்னருக்கெதிராய் நடைபெற்ற ஒரு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்திலும் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது 40 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

---

## அஹிம்சா வீரர் கிங்கிற்கு பாராட்டு

ஒஸ்லோ, டிச 11 அமெரிக்க நீக்ரோ தலைவர் டாக்டர் மார்டின் லூதர்கிங் நேற்று 1964-ம் ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசைப் பெற்றார் தமது பரிசுத்தொகையை நீக்ரோ உரிமைப் போராட்டத்திற்குஅவர் வழங்கியிருக்கிறார்.

காந்தி சமாதானத் தலைவர் திரு. ஆர். ஆர். திவாகர் உட்பட, இந்தியா முழுதும் நடைபெற்ற பல கூட்டங்களில் டாக்டர் கிங்குக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் கிங் சமாதான வீரர் என்றும் சொந்த நாட்டில் நிறத்துவேஷத்தை நீக்க அவர் பாடுபட்டு வருவதாயும் மாநாடொன்றில் அறிவிக்கப்பட்டது. தமது போராட்டத்தை அஹிம்சையின் அடிப்படையில் அவர் நடத்தி வருவது எல்லோருக்கும் உதாரணமாய் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

---

## ராஜாஜி பிறந்தினம்

சென்னை, டிச 11 ராஜாஜியின் 87-வது பிறந்தினத்தை முன்னிட்டு நகரின் பல பகுதிகளில் சுதந்திரக் கட்சிக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. நகரில் 175 கோவில்களிலும் விசேஷ பூஜைகள் நடத்தப்பட்டன சர்ச்சுகளில் பிரார்த்தனைகளும், மசூதிகளில் தொழுகைகளும் நடத்தப்பட்டன. 2000 ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. பம்பாயிலும் அவரது பிறந்தினம் கொண்டாடப்பட்டது.

---

## ஷோம்பேயால் குழப்பம்

ரோமாபுரி, டிச. 11 காங்கோ பிரதமர் ஷோம்பே நேற்று பாப்பரசரைச் சந்தித்தார். அவரது வருகை சம்பந்தமாக நேற்று ரோமாபுரியில் ஆர்ப்பாட்டங்களும் கைகலப்புகளும் நடைபெற்றன. இருசாரார் கைகலப்பு நடத்தியதால் பலர் காயமடைந்தனர் அவரது வருகை பற்றி சட்டசபையிலும் குழப்பம் ஏற்பட்டதால், சபை ஒத்திவைக்கப்பட்டது.

---

## ஆபிரிக்காவில் சீனத் தலையீடு

### பாரதூரமானது என்கிறார் வில்சன்

லண்டன், டிச 11 அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன், கனடா பிரதமர் பியர்ஸன் ஆகியோருடன் பேச்சு நடத்திவிட்டு பிரிட்டிஷ் பிரதமர் வில்ஸன் லண்டன் திரும்பினர்

தமது பேச்சுக்கள் மிகவும் வெற்றிகரமாக இருந்தது எனக்கூறிய வில்சன் அடுத்த வாரம் காமன்ஸ் சபையில் நேட்டோ கொள்கை பற்றித் தாம் அறிக்கை விடப் போவதாய்த் தெரிவித்தார்.

ஆபிரிக்காவில் சீனா தலையிட்டு வருவதும், அதன் அணுக்குண்டு சோதனையும் நேசநேசங்களுடன் மட்டுமன்றி, காமன்வெல்த் நாடுகளுடனும் பரிசீலிக்க வேண்டிய அபாயகரமான நிலைமை என வில்சன் கூறினார்.

---

## தற்காலிக கவர்னர்

புதுடில்லி, டிச 11 கோவாவின் தற்காலிகலெப்டினண்ட் கவர்னராக திரு. ஹரிசர்மாவை ஜனதிபதிராதாகிருஷ்ணன் நியமித்திருக்கிறார்.

---

## மீண்டும் பௌத்த இயக்கம்

சைகோன், டிச. 11 தென்வியட்னும் அரசாங்கத்தை வீழ்த்து முகமாக பௌத்த தலைவர்கள் பெரும் இயக்கம் ஒன்றை நடத்த தயாராகி வருவதாய் அறிவிக்கப்பட்டது.

---

## "அமெரிக்க பிச்சைக்காரர்கள்"

நியுயோர்க், டிச. 11 நியுயோர்க் நகரில் நடமாடும் தெருப் பிச்சைக்காரர்கள் "நல்ல" நாட்களில் தினம் ஒன்றுக்கு ரு 130 சம்பாதிக்கின்றனர். இதுதவிர அவர்களுக்கு மாதம் சுமார் ரு 535 நிவாரண உதவியும் கிடைக்கிறது. இதற்கு வரி செலுத்தும் பிரச்னையே இல்லை

---

## சுவரணசிங்-ரஸ்க் பேச்சு

நியுயோர்க், டிச, 11 ஐ. நா.வில் தனது கோஷ்டிக்கு தலைமைவகிக்கும் இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங்குக்கு அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க நேற்றுப் பகல் விருந்தளித்தார். அப்போது இருவரும் பொது அக்கறையுள்ள விஷயங்கள் பற்றியும் தென்கிழக்காசியா பற்றியும் ஐ நா பிரச்னை பற்றியும் பேசியதாக திரு. ரஸ்க் பின் நிருபர்களிடம் தெரிவித்தார். இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவையும் சுவர்ண்சிங் சந்தித்துப் பேசினார்.

---

## ராஜினமா செய்ய ஜகன் மறுப்பு

ஜார்ஜ்-டவுன, டிச. 11 தேர்தலில் முறைகேடு காரணமாகவே தமது கட்சி தெளிவான மெஜாரிட்டி பெறமுடியாது போய்விட்டதென பிரிட்டிஷ் கயானு பிரதமர் டாக்டர் செட்டி ஜகன் கூறினார். எதிர்க்கட்சித் தலைவர் திரு பேர்ன்ஹாமுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்க அவர் முன்வந்தும், திரு. பேர்ன்ஹாம் அதற்கு இணங்கவில்லை.

டாக்டர் ஜெகன் நேற்று கவர்னரைச் சந்தித்ததாயும், பிரதமர் பதவியை ராஜினமா செய்ய மறுத்துவிட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

பிரிட்டன் அவரைப் பதவி நீக்கம் செய்யக்கூடுமெனக் கருதப்படுகிறது.

---

## மதுரைஜில்லாவில் காலரா

மதுரை, டிச. 11 மதுரை நகரம் உட்பட, மதுரை ஜில்லா முழுதும் காலரா அபாயம் ஏற்பட்டிருக்கிறதென ஜில்லாக் கலெக்டர் அறிவித்திருக்கிறார்.

---

## வெடிவிபத்தில் மூவர் பலி

கல்கத்தா, டிச. 11 கல்கத்தாவுக்கருகே காகிதத் தொழிற்சாலை ஒன்றில் வெடிவிபத்து ஏற்பட்டதால் மூவர் மாண்டனர். பதின்மூன்று பேர் காயமடைந்தனர்.

---

## பிப்ரவரியில் கேரள தேர்தல்

புதுடில்லி, டிச, 11 கேரளத்தில் பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாதென்றும், திட்டமிட்டபடி அடுத்த பிப்ரவரிமாதம் தேர்தல் நடத்தப்படும் என்றும் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி லோகசபையில் கூறினார்

---

## உணவு நிலைமை திருப்திகரம்

கொழும்பு, வெள்ளி கிறிஸ்மஸ் தினத்திற்கான உணவு நிலைமை திருப்திகரமாகவுள்ளதென உணவு கமிஷனர் திரு பி. ஏ. சில்வா தெரிவித்துள்ளார்.

அரிசி, சீனி, மற்றும் உணவு வகைகள் போதியளவு கையிருப்பில் இருப்பதாக தெரிய வருகிறது.

# ஹிந்தி பற்றி ராஜாஜி மீண்டும் எச்சரிக்கை

சென்னை, டிச. 11 கல்வித்துறையிருந்தும் அரசாங்கத்திலிருந்தும் ஆங்கிலத்தை வெளியேற்றும் பணியில் பார்லிமெண்டிலுள்ள ஹிந்தி மெஜாரிட்டியும், காங்கிரஸ் மேலிடமும் இடையறாது ஏற்றம் கண்டு வருகிறது. இது ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவாதங்களைத் தாண்டிச் சென்று நடைபெறுகிறது. பகுத்தறிவையும் காரண காரியங்களையும் கூடத் தாண்டிச் சென்று இப்பணி நடைபெறுகிறது" என ராஜாஜி "ஸ்வராஜ்யா" பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

"ஹிந்தி பேசா மக்கள் பல வேறு மொழிப் பிரிவுகளாகச் சிதறுண்டு கிடக்கிறார்கள். ஏற்கனவே தமது நலன்களை பயனுள்ளவகையில் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களால் முடியாத நிலை இருந்து வருகிறது.

ட்தகோடி மக்களின் இதைச் சொல்ல நான் ஒருவனே மிஞ்சிய நிலை ஏற்பட்டாலும்கூட, என் இந்தியசகோதர சகோதரிகளுக்குப் புனிதமான எச்சரிக்கை ஒன்றைச் செய்கேன்

இது பைத்தியக்காரத் திட்டம். எல்லா வகைகளிலும் இந்தியா பின்னடையும்படி அது செய்து விடும். நமது மதம், தேசம், மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இது முற்றிலும் அவசியம்" என ராஜாஜி மேலும் எழுதுகிறார்

---

## அமெரிக்காமீது கண்டனம்

நியூயோர்க், டிச. 11 ஐ.நா.பாதுகாப்புசபைநேற்று காங்கோபிரச்னைபற்றி விவாதித்தது. கினி பிரதிநிதி அப்போது பேசுகையில், அமெரிக்காவும், பெல்ஜியமும் காங்கோவில்குறைகிடந்த காலனி ஆதிக்கத்தை மீண்டும் ஏற்படுத்தும் செயலே ஆகும் எனக் கண்டித்தார்.

கடந்த 4 ஆண்டுகளாக ஆபிரிக்காவின் தேசிய கேந்திரமாக ஸ்டான்லிவில் நகர் விளங்கிவருகிறது என்றும், அதை அழிக்கவே மேற்கு நாட்டுப் படைகள் ஆக்கிரமிப்புச் செய்தன என்றும் அவர் குற்றஞ்சாட்டினர்.

மாலி பிரதிநிதி பேசுகையில் சர்வதேச பொலிஸ் அதிகாரியாக அமெரிக்கா நடந்து கொள்வதை ஆபிரிக்கா விரும்பவில்லை என்றார்.

---

## குவாலியர் பல்கலைக்கழகம்

குவாலியர், டிச. 11 27 கல்லூரிகளைக் கொண்ட குவாலியர் பல்கலைக் கழகத்தை ஜனதிபதி ராதா கிருஷ்ணன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

# டாக்டர் பெரேரா லண்டனிலிருந்து 16-ம் திகதி புறப்படுகிறார்

லண்டன், டிச. 11 லண்டனில் சுகவீனமுற்றிருக்கும் இலங்கை நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா வருகிற பதினாறும் திகதி "ஏசிலோன்" விமான மூலம் கொழும்பு புறப்படுவார். விமானத்தில் அவரது அந்தரங்கக் காரியதரிசியும் ஒன்றாகப் பிரயாணம் செய்வார்.

டாக்டர் பெரேரா, இயன்றவரை விரைவில் இலங்கை திரும்ப ஆவல் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. புதன்கிழமை அதிகாலை டாக்டர் பெரேரா ஆஸ்பத்திரியிலிருந்து அனுப்பப்படுவார் என்றும் அன்றைய தினமே அவர் கொழும்பு புறப்படுவார்என்றும் ஆஸ்பத்திரி அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

பதினறும் திகதி காலை 9-30 க்கு லண்டனிலிருந்து புறப்படும் இந்த விமானத்தில் மந்திரிக்கும், அவரது அந்தரங்க காரியதரிசிக்கும் இரு ஆசனங்கள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

---

## கென்யா குடியரசு

நைரோபி, டிச 11 கென்யா இன்று நள்ளிரவு குடியரசாகிறது. ஜனதிபதியாகும் திரு. கென்யாட்டா, தனது உப ஜனதிபதியாக திரு. ஓடிங்காவை நியமித்திருக்கிறார்.

---

## சாரதிக்கு அபராதம்

ஊர்காவற்றுறை, வெள்ளி நாரந்தனையைச் சேர்ந்த தம்பாட்டி வாசியரன எம். கதிரவேலு என்னும் கார் சாரதி குடிபோதையுடன்கார் செலுத்தினர் எனக் குற்றம்சாட்டி ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் கார் சாரதிக்கு 250 ரூபா அபராதம் விதித்தார். அபராதம் கட்டத் தவறினல் மூன்று மாதம் சிறைத்தண்டனை எனவும் தீர்ப்புக்கூறினர், ஆறுமாத காலத்திற்கு 'கார்' லைசன்ஸ் நிறுத்தப்பட்டு இருப்பதாகவும் நீதிபதி குறிப்பிட்டார்.

---

## கெம்பியாவுக்கு சுதந்திரம்

லண்டன், டிச. 1 மேற்கு ஆபிரிக்காவில் கடைசி பிரிட்டிஷ் காலனியான கெம்பியாவுக்கு பெப்ரவரி மாதம் சுதந்திரம் வழங்கும் முடிவை, எல்லா கட்சிகளிலும் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஏற்றது.

---

## மிஸ் ஜின்னு

கராச்சி, டிச 11 தாம் அதிபர் தேர்தலில் தோற்றாலும் நாட்டில் பூரண ஜனநாயகத்தை ஏற்படுத்தப் போராட்டம் நடத்தப்போவதாக மிஸ்பாதிமா ஜின்னு கூறினர். அரசாங்கத்தின் முறைகேடான செயல்களுக்கு மத்தியிலும் தாம் அதிபர் தேர்தலில் வெற்றி பெற நம்புவதாயும் அவர் கூறினர்.

---

## 30 பேர் மாண்டனர்

புதுடில்லி, டிச 11 வடகிழக்கு ரயில்வேயில் ஏற்பட்ட ரயில் விபத்தில் மாண்டவர்களின் தொகை 30 ஆக அதிகரித்திருக்கிறது.

---

## காஷ்மீரில் கடும்பனி

ஸ்ரீநகர், டிச. 1 காஷ்மீர் பள்ளத்தாக்கில் கடும் பனி பெய்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

---

## எவரும் சித்திபெறவில்லை

கொழும்பு, வெள்ளி கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற எம். எஸ்.ஸி. பரீட்சையில் ஒருவராவது சித்தியடையவில்லை

இத் தகவலை சர் நிக்லஸ் அட்டிகலே கேற்றுத் தெரிவித்துள்ளார்.

## "கலை வளர்ப்பதே நோக்கம்"

நல்லூர், வெள்ளி

"அரசியல், சமயம், கலை வளர்ப்பதில் பலரிடையேயும் பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவர்களின் நோக்கு ஒன்றுதான் அவர்கள் எந்த நோக்கத்திற்காகப் பாடுபடுகின்றனரோ அந்த நோக்கினை அடைய பலமுயற்சிகளை மேற்கொள்ளுகின்றனர்." என்று மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றத் தலைவர் சிவஸ்ரீ சு. து, சண்முகநாதக்குருக்கள் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ் மறுமலர்ச்சி மன்றத்தினர் இலங்கை கலைக் கழக நாடகவிழாவில் 'ஆராமுது அசுர' என்னும் நாடகத்தை மேடையேற்றிய பரிசுபெற்றதை பாராட்டி மாவை முத்தமிழ்க் கலைமன்றத்தினர் அவர்களுக்கு தேநீர் விருந்துபசாரமளித்துக் கௌரவித்தனர் இக்கூட்டத்திற்கு சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் தலைமை வகித்தார்.

திரு. எஸ், சோமசுந்தரம் பேசுகையில் கூறியதாவது;-

நாடகங்களை மேடை யேற்றும்போது வீண் ஆடம்பரக் காட்சிஜோடனைகளுக்கு செலவு செய்தல் கூடாது. மேலை நாடுகளில் நாடகங்கள் நடிக்கப்படும்போது கையாளப்படும் உத்தி முறைகளைப் பின்பற்றி தமிழ் நாடக உலகையும் முன்னேற்றவேண்டும். தமிழ் நாடகங்களில் சொற்களை உச்சரித்து பல ஜாலங்களைச் செய்யலாம்

திரு. ஏ. டி. பொன்னுத் துரை யாழ் மறுமலர்ச்சி மன்றத்தினருக்கு மாவை முத்தமிழ்க்கலை மன்றத்தின் பணிகளை விளக்கிக் கூறினர். திருவாளர் ன் த. இராசரத்தினம், வ. மாப்பாணர் ஆகியோரும் பேசினர்.

## நயினை கோவிலுக்கு புதிய அசையாமணி

நயினாதீவு, வெள்ளி

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலில் சுமார் 2000 ரூத்தல் கொண்ட புதிய அசையாமணி வருகிற 14-ந் திகதி திங்களன்று காலை 10 மணிக்கு மணிக் கோபுரத்தில் ஏற்றப்படுமெனத் தெரிகிறது. கோண்டாவில் திரு. சோமசுந்தர ஆச்சாரியாரால் வார்க்கப்பட்ட இந்த மணியை உபகரித்தவர் மீசாலையைச் சேர்ந்த திரு சுப்பிரமணியம் தம்பதிகளாவர்.

## குடியேற்ற வாசிகள் கட்சி நிறுவினர்

லண்டன், டிச 11

பிரிட்டனில் குடியேறியுள்ள கறுப்பு நிறத்தவர் தங்களை பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு ஒரு கட்சியை நிறுவியுள்ளனர்.

## "சாகித்திய விழா"

வேலணை, வெள்ளி

இம்மாதக் கடைசியில் ஓர் சாகித்திய விழாவை நடத்த வேலணை கிராமசபை தீர்மானித்துள்ளது. இவ்விழாவில் பாடசாலைப் பிள்ளைகளும் சனசமூக நிலையங்களும், பேச்சுப் போட்டி, சங்கீதக் கச்சேரி, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளுமாறு கிராம சபைத் தலைவர் திரு. பு. சுப்பிரமணியம் வேலணை கிராமசபை எல்லைக்குள் அமைந்துள்ள சகலபாடசாலைத் தலைவர்களுக்கும், சனசமூக நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார். மேற்படி போட்டியில் திறமையடைவோருக்கு கிராம சபையால் பரிசில்கள் வழங்கப்படும்.

## லஞ்ச ஊழலை ஒழிக்க வழி

கொழும்பு, வெள்ளி

அரசாங்க சேவையில் லஞ்ச ஊழலையும் மோசடியையும் ஒழிப்பதற்கு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், உணவு இலாகா, சுங்கப் பகுதி ஆகியவற்றில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர் 6 மாதத்திற்கொரு முறை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று நிரந்தரக்காரியதரிசிகளின் விசேஷ கமிட்டி அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளது.

இந்த உத்தியோகத்தர்களை புதிய இலாகாக்களுக்கு இடமாற்றம் செய்வதன் மூலம், சிலருக்குப் பாரபட்சம் காட்டப்படுவதையும் நீக்கமுடியும் என்றும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

## தேர்தல் இலாகா கூட்டம்

கொழும்பு, வெள்ளி

அடுத்தவருடம் மார்ச் மாதம் 24-ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதில், தேர்தல் இலாகா ஈடுபடத் தொடங்கியுள்ளது.

தேர்தல் இலாகா உத்தியோகத்தர்களின் முதலாவது கூட்டம் இம்மாதம் 16-ம் திகதி தேர்தல் கமிஷனர் திரு. பீலிக்ஸ் டயஸ் அபயசிங்காவின் தலைமையில் நடைபெறும்.

## புராண படிப்பு

வேலணை வெள்ளி

வேலணை மேற்கு மகா கணபதிப்பிள்ளையார் கோவிலில் சென்ற வாரந்தொடக்கம் விநாயகர் புராணப் படிப்பு நடைபெறுகிறது.

திருவாளர்கள் அ. கணபதிப்பிள்ளை, மு, பசுபதிப்பிள்ளை ஆகியோரின் தலைமையில் புராண படிப்பு நடைபெறுகிறது

## நாவற்குழி கிராமசபை

யாழ்ப்பாணம், சனி

சபையின் அனுமதிபெறாமல் உத்தியோகத்தர் ஒருவரை தலைவர் நியமித்ததாகவும் தலைவரின் இச் செயலைக் கண்டிப்பதாகவும் நாவற்குழி கிராம சபைக் கூட்டத்தில் ஒரு அங்கத்தவர் கொண்டுவந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

கிராமசபைத் தலைவர் திரு. க. தம்பிப்பிள்ளை சபையின் அனுமதியின்றி சபை உத்தியோகத்தராக ஒருவரை நியமித்துவிட்டுச் சபையின் அங்கீகாரத்தைப்பெற முயற்சிசெய்வது மாறான செயல் என்று திரு. கா. ஆறுமுகம் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இப் பிரேரணையை திரு. செல்லத்துரை அனுவதித்தார். ஒரு அதிகப்படியான வாக்கினால் பிரேரணை நிறைவேறியது.

## உதிரிப்பாகங்கள் இறக்குமதித்தடை

கொழும்பு, வெள்ளி

இந்நாட்டிலுள்ள பிரபல கைத்தொழில் ஸ்தாபனங்கள் அரசாங்கத்தின் மோட்டார் உதிரிப்பாகங்களின் இறக்குமதித்தடையினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான ஆயிரத்தி இருநூறு மோட்டார் வாகனங்களுக்கு உதிரிப்பாகங்கள் கிடைக்காததால் அவைகளைச் சேவைக்கு விடமுடியாமலிருக்கிறது.

அரசாங்கக் கொந்தராத்துக்காரருக்குச் சொந்தமான 200 லொறிகளுக்கும், உதிரிப்பாகங்கள் கிடைக்காததால் சேவைக்குவிடப்படவில்லை.

## ரயில் விபத்து அறிக்கை

கொழும்பு, வெள்ளி

வில்வத்தையில் நடைபெற்ற புகையிரத விபத்து அறிக்கை அடுத்த மாதம் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. கமிஷனர் திரு. டி. ஏர்லி விஜயவர்த்தின, இந்திய நிபுணர் திரு. ஏ. கே. குப்தா பேராசிரியர் ஈ. ஓ. ஈ. பெரேரா ஆகியோர் அறிக்கை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இக் கமிஷன் முன் 25 பேர்கள் சாட்சியமளித்துள்ளார்கள்.

## செட்டிகுளத்தில் கசிப்பு வேட்டை

வவுனியா, வெள்ளி

வவுனியாமாவட்டத்திலுள்ள செட்டிகுள பெரும்பாக உத்தியோகத்தரின் பிரிவில் உள்ள முதலியார் பகுதிக் கிராமசேவகரின் வட்டாரத்தில் உள்ள பலகைமடுக் கிராமத்தின் அடர்ந்த காட்டுக்கு நடுவில் சட்டவிரோதவடிசாராயம் காய்ச்சும் உபகரணங்களை கிராமசேவகர் திரு. ச. வி. சரகப்பெருமாள் ஒரு இளம் வாலிப கோஷ்டியுடன் சென்று கைப்பற்றினர்.


எல்லோருமே தமக்கு வேண்டிய மலர்களுக்கும், மரக்கறி விதைகளுக்கும் எஸ். ஏ. பெர்னாண்டோ விடமே ஆடர்செய்கிறார்கள்.

ஏன் தெரியுமா........?

........ அவர்கள் நாடு பூராவும் உள்ள மக்களுக்கு கடந்த 43 ஆண்டு காலத்திற்கு மேலாக நறுமணம் கமழும் புது மலர்களும், விதம் விதமான மரக்கறி விதைகளும் விநியோகம் செய்துவருகிறார்கள்.

வேறு எந்த ஸ்தாபனமும் தோற்கடித்துவிட முடியாதவாறு எஸ். ஏ. பெர்னாண்டோ ஸ்தாபனத்தார் தமது நற்பெயரை கட்டிக்காத்து வருகிறார்கள். இந்த நற்பெயரே அவர்களுக்கு ஆடர்களைக் குவிக்கின்றன.

நேரடியாகவேனும் கடித மூலமாகவேனும் தொடர்புகொள்ளவும்.

**எஸ். ஏ. பெர்னாண்டோ**

த பெ எண்: 16

பழைய பஸார், நுவரேலியா.

தொலைபேசி எண் 1283, தந்தி: பாத்திமா.



எனக்கு மிகவும் பிரியமானது



CEYLON CHOCOLATES LTD

**கன்டொஸ்**

உயர்ந்த ரகச் சொக்கலேற்று




RAVI-CCL-116

ஏக விநியோகஸ்தர்கள்:-

**ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்**

கொழும்பு — 3.

RAVI - Col-116

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 12-12-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-15 திருவெம்பாவை நிகழ்ச்சிகள், 6-45 உதயகீதம், 6-55 கிறிஸ்தவ கற்சிந்தனை 7-15 பாட்டு, 7 45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை, 6-15 கிராமஞ்சிகை, 6-45 இவ்வார நிகழ்ச்சிகள்.

இரவு 7-00 இசைநிகழ்ச்சி — ராம்குமாரசாமி — பாட்டு 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 9-15 பேச்சு — "சீல அனுபவம்" — எஸ். செர்தல் சண்முகநாதன், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 13-12-64

காலை 6-15 திருவெம்பாவை நிகழ்ச்சிகள், 6-45 உதயகீதம், 7-15 பாட்டு, 7-45 இசைப் பயிற்சி, 8-15 தமிழ் முஸ்லிம் சிக்கனம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை நிகழ்ச்சிகள், 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-45 வீணை, 7-00 பாட்டு — பாலம் லக்ஷ்மணன், 7-30 நாடகம் — "பாசமும் நீதியும்", 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 8-15 மாணவர் மன்றம், 9-15 மாதர் கேட்டவை, 9-45 தேர்ந்த இசை, 10-00 பாட்டு.

## திருச்சி

### சனி 12-12-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-0, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 இசைக் கோவை.

பகல் 1-00 பின்னணிக்கனிய முது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்திய இசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 நாடகம் — "நிலைக்குமாம் நீதி", 8-00 வயலின் — வேதவல்லி ராமசாமி, 10 00 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

### ஞாயிறு 13-12-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 பாட்டு — டி சரோஜினி, 8-15 பாட்டு — எஸ். ராமநாராயணன்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12 30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 பாட்டு — டி. பி. ராஜேஸ்வரி.

மாலை 5-15 பாட்டு — டி. சரோஜினி, 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 இளங்கோ கண்ட தமிழர் வாழ்வு பற்றி ஏ ராஜரத்தினம் — பேச்சு, 7-45 வீணை — கமலா பசுபதி, 8-30 மெல்லிசை, 8-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள், 10-00 துதிப்பாடல்கள்.




இதோ இலங்கையர் பிரீதியுடன் பாவிக்கும் ஒடிக்கோலான் பார்(f)பும், பார்(f)பும் இலேசாக நறுமணமூட்டப்பட்டது. புத்துணர்ச்சியும், தெம்பும் சரியாக நல்கவல்லது. நோயுற்றவேளையிலோ அல்லது பொதுவாக தூய்மையாகவிருக்கவோ இது உங்களுக்கு அவசியப்படும் ஸ்நானத்திற்குப் பிறகு, வைபவத்திற்குப் போகுமுன், கடுமையான டெனிஸ் விளையாட்டுக்குப் பின்னர் அல்லது அலுவலகத்தில் இதனைப் போன்ற சிறந்த துணைவேறொன்றுமிருக்க முடியாது.

பார்(f)பும் வெகு நேர்த்தியான ஸ்ட்ரீம்லைன் போத்தலில் அடைக்கப்பட்டுள்ளது. இதன் பெயரை சொல்லியே கேளுங்கள். எப்பொழுதும் கைவசமாக ஒரு போத்தலை வைத்திருங்கள்.

எல்லா பெரிய வியாபாரிகளிடமும் [illegible]விதி அளவுகளில் கிடைக்கும்.

பார்(f)பும் லிமிட்டெட் [illegible]மிக்க தயாரிப்பு.

LR 2/63 MAS

## சுதந்திரக் கட்சியின் துரோகம்

வவனியா, வெள்ளி

"தமிழரசுக்கட்சியின் ஒத்துழைப்பின்றேல் எந்தக் கட்சியும் நீடித்து ஆட்சி செலுத்த முடியாது என்பதை இனியாவது ஆளும் கட்சி உணர வேண்டும்" என்று வவனியா மாவட்ட தமிழரசு வாலிபமுன்னணித் தலைவர் திரு. செ. ஞானசேகரம் வேப்பங்குளத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

1960-ம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் உதவியுடன் பதவிக்கு வந்த சுதந்திரக்கட்சி தமிழருக்கு பெரும் துரோகம் செய்துவிட்டதாகவும் அவர் மேலும் பேசும்போது கூறினர்.

## இன்று அட்டனில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவிப்பதுபோன்ற வேறுபாடற்ற வாக்குரிமை தமிழ் பேசும்மக்கள் அனைவருக்கும் அளிக்கப்படவேண்டுமென்றும் இலங்கையில் நிரந்தரமாக வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் பாரபட்சமற்ற முறையில் இந்நாட்டின் இரு குடிகள் அனுபவிக்கும் அடியுரிமைக்குச் சமமான குடியுரிமை வழங்கப்படவேண்டுமென்றும், இம்மகாநாட்டில் கோரப்படும்.

## செய்திச் சுருக்கம்

பட்டதாரிப் பரீட்சை எழுதிவிட்டு, பரீட்சைமுடிவுக்காகக் காத்துநிற்கும் வித்தியோதய, வித்தியாலங்கார சர்வகலாசாலை பட்டதாரி மாணவர்களுக்கு ஆசிரிய உத்தியோகங்கள் கொடுக்கப்படும் என்றும் நியமிக்கப்பட்டவர்கள் பரீட்சை முடிவு வந்தபின் அதில் தேறத்தவறினால் வேலையிலிருந்து நீக்கப்படுவரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

∴ ∴ ∴

அரசியல்நிலைமை மோசமாக இருந்தபோது அமைக்கப்பட்ட கூட்டரசாங்கம் மக்களுக்காக உழைத்தது என திரு அனில் முனசிங்கா அக்கிரியாவில் நடைபெற்றகூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

∴ ∴ ∴

இலங்கை வங்கி டைரக்டர் பதவியிலிருந்து திரு. சி பி டி' சில்வாவின் மைத்துனரான திரு. ஆர். டி' சில்வா விலக்கப்பட்டமை வெறும் வதந்தி' என்று நிதிமந்திரி கூறியுள்ளார்.

∴ ∴ ∴

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஜனுப் ஏ. அஸீஸ் டிக்கோயா வீரட்டுத் தோட்டத்தில் நடந்த கூட்டத்தில் பேசும்போது சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் வெறும் ஏமாற்று ஒப்பந்தம் எனவும் தோட்டத் தொழிலாளருக்கு இந்த ஒப்பந்தத்தால் எவ்வித அனுகூலமும் இல்லையென்றும் கூறினர்.

∴ ∴ ∴

உப தபாலதிபர்களின் கலவுரிமைகளை ஆராயும்பொருட்டு நியமிக்கப்படும் விசாரணைச் சபைகளில் தமது தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ளும்படி கேட்கும் தீர்மானத்தை அகில இலங்கைத் தமிழ்பேசும் உப தபாலதிபர் சங்கம் மட்டக்களப்பில் நடந்த தமது இரண்டாவது வருடாந்த மகாநாட்டில் நிறைவேற்றியது.

## வரி விளம்பரங்கள்

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பேரங்கள் அடங்கிய கற்றலைக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கலையபிவிருத்தியர் கோவில், யாழ்ப்பாணம்

### கார் விற்பனை

E N 8000 தொடர்இலக்க முன்ன மொறிஸ்மைனர் விற்பனைக்குண்டு ஐந்து ரயர், பற்றறி பெயின்ற் அப்கோல்ஸ்றி எல்லாம் புதியவை (Show room condition) விலாசம்: 91 பெரியதெரு, யாழ்ப்பாணம். 1311

### வீடு வாடகைக்கு

இந்து மகளிர் கல்லூரிக்கருகில் ஆறு அறைகள், கருக், மின்வெளிச்சம், குழாய்த்தண்ணீர் முதலிய வசதிகளுடன். விபரங்களுக்கு: 88 கல்லூரி வீதி, நீராவியடி 1318

### தேவை

எமது தயாரிப்புகளை சைக்கிளில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு ஆட்கள் தேவை. தேவன்ஸ் (ராஜுன்ரோஸ் அருகாமை) யாழ்ப்பாணம். 1312

### COLLEGE OF HIGHER STUDIES

Anaipanthy—Jaffna

Classes in Building construction Draughtsmanship including Drawing plans sections and elevations to scale. taking out Quantities and framing Estimates with data for labour and materials commence on the 6 th January 1965

1196 Apply Registrar

### School of Technology, Jaffna
### 1965 - 66 Courses.

**Candidates with J S C.**

| | |
|---|---|
| Electrical Installation Work<br>Motor Mechanism | Theory and Practical<br>One Year Courses |

**Candidates with G. C E Certificate with passes in Pure Maths, Physics and English:-**

| | |
|---|---|
| Electrical Engineering Practice<br>(Preliminary) | City & Guilds London,<br>Examinations. |

**Candidates with G C E. Certificate with Pure Maths., English and preferably with Drawing:-**

Authorised Draughtsmen - Surveyor General's Exam., May 1966.

| | |
|---|---|
| Civil Engineering Drawing<br>Building Construction | School Certificate. |

Applications close on 5-1-65 Courses commence on Jan 18 1965 Forms and other particulars can be had from

"Citadel" Chundikuli,
Jaffna. Director.

30[illegible]

## திருமண அழைப்பு

சிவசுப்பிரமணிய — குமுதினி

நிகழும் கார்த்திகை த் திங்கள் 29-ம் நாள் (14-12-64) காலை மணி 6-30 க்கும் 7-30 க்குமிடையில் எமது மகள் செல்வி குமுதினிக்கும் சித்தங்கேணி செல்வன் பொன்னையா சிவசுப்பிரமணியம் அவர் களுக்கும் நல்லூர், வடக்கு வீதி, 138/8 இலக்க இல்லத்தில் திருமணம் நிகழவிருகிறது. இவ் வைபவத்திற்கு நண்பர்களையும் சுற்றத்தவர்களையும் சமுகமளித்துச் சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், மா. பொன்னம்பலம் தம்பதிகள் (தனி அழைப்பு). 1309

இடபொழுது திரையிடப்படுகிறது

ராஜா சினிமா (சுளிபுரம்)

எம். ஜி ஆர் - சரோஜா தேவி நடித்த

தாய் சொல்லைத் தட்டாதே

ஸ்ரீ மனோகரா

(யாழ்ப்பாணம்) போன் 4 8 5

சிவாஜி—மாதுரிதேவி நடித்த

மனிதனும் மிருகமும்

REGAL — JAFFNA

NOW SHOWING

BOB HOPE

ANITA ERBERG

IN

PARIS HOLIDAY

(Technirama - Technicolor)

# இரட்சணிய முகாமிலிருந்து வெளியேறிய முத்துமெனிக்கா

## பிஸ்கால் காவலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், வெள்ளி

இரட்சணியசேனை முகாமிலிருந்து எவருக்கும் தெரியாமல் வெளியேறிய 15 வயது யுவதி முத்து மெனிக்காவை பிஸ்கால் பாதுகாப்பில் வைக்கும்படி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார்.

இரட்சணியசேனை முகாமில், தான் வெளியே போகவேண்டுமென்று கூறியபொழுது தன்னை அங்குள்ளவர்கள் அடித்துக் கஷ்டப்படுத்தியதாக முத்துமெனிக்கா பொலிசாரிடம் கூறியதாகவும், அங்கிருந்து அவர் சிகிச்சை பெறுவதற்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார் என்றும் அறியப்படுகிறது.

அம்பன்பொல்லையைச் சேர்ந்த முத்துமெனிக்காவை கன்னாகம் மத்திய மின்சாரநிலையத்தைச் சேர்ந்த கே. விஜயசுந்தர கூட்டிவந்து கடந்த ஆறு மாதமாக தனது ஆசைநாயகியாக வைத்திருந்ததாகவும் பதிவுசெய்து முத்துமெனிக்காவை தனது மனைவியாக்க அவர் விரும்பவில்லையென்றும், இதுபற்றிக் கூறப்படுகிறது.

பன்னிரண்டு சகோதரர்களோடு பிறந்த முத்துமெனிக்கா, பெற்றோருக்கு எட்டாவது பிள்ளையென்றும், விஜயசுந்தரா அவரை கன்னாகத்திற்கு அழைத்துவந்தார் என்று மேலும் கூறப்படுகிறது.

நீதிபதியின் உத்தரவின்படி ரிமாண்டிலிருக்கும் முத்து மெனிக்கா இம்மாதம் 14-ம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர்செய்யப்படுவார். அன்றையதினம் விஜயசுந்தராவும் கோர்ட்டில் ஆஜராக்கப்படுவார் என்றும் தெரியவருகிறது.

வீதியில் காணப்பட்டார் என்று முத்துமெனிக்காமீது பொலிசார் தொடர்ந்த வழக்கில்தான் அவர் முகாமில் இரட்சணியசேனை முகாமிற்கு அனுப்பப்பட்டார்.

## சுன்னாகம் தமிழ்விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையில் நடைபெறும் தமிழ் விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் நாவலர் அரங்கில் உதவி வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெறும்.

நாதஸ்வர வித்வான் கலாநிதி என். கே பத்மநாதன் கோஷ்டியினரின் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகும் இன்றைய விழாவில் திருவாளர்கள் பொ. நாகலிங்கம், ஆ. தம்பிப்பிள்ளை, நா. திருநாவுக்கரசு, சி. பி. ஹரன், செல்வி சிவசித்திரமணி சீனிவாசகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுகிறார்கள்.

புலவர்மணி ஏ. பெரியதம்பி பிள்ளையின் தலைமையில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் திருவாளர்கள் புதுமைலோலன், இ. மகாதேவா (ரதவன்), நாவேந்தன் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். சந்திரோதயா கலாநிலைய மாணவிகளின் நடனமும், திரு. வி. க ஆறுமுகத்தின் வில்லுப்பாட்டும் விழாவில் இடம் பெறும்.

## பயிர்ச்செய்கைக் குழுவின் சமாசம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வலிகாமம் கமத்தொழில் சேவை பெரும்பாக 'உதவி யோகத்தர் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில், பயிர்ச் செய்கை குழுவின் சமாசம் ஒன்று நிறுவப்பட்டது. இக்கூட்டத்திற்கு 22 பயிர்ச்செய்கை குழு சமாசத்தினர் சமுகமளித்திருந்தனர்.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ஏ. தையல்பாகர், உபதலைவர்: திரு. எஸ். எம். அப்புத்துரை, காரியதரிசி: திரு எஸ், அம்பலவாணர், உபகாரியதரிசி: திரு. ஏ. எஸ். நடராசன்: தனாதிகாரி: திரு. ஜே. சின்னப்பா, மேலதிக நிர்வாகசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள் ஈ. இராமலிங்கம், சீ. செல்லத்தம்பி, ஈ ஆறுமுகம், சீ சுப்பிரமணியம், கே. வேலுப்பிள்ளை, வி. செல்லத்துரை.

## இளம் பெண் தற்கொலை

உடுப்பிட்டி, வெள்ளி

இருபது வயதான திபாகேஸ்வரி என்ற மணமான இளம்பெண் தோட்டக் கிணறு ஒன்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்ட பரிதாபகரமான சம்பவம் கரணவாயைச் சேர்ந்த வெள்ள மாலடியில் இடம்பெற்றுள்ளது.

கழுத்தில் தாலிக்கொடியுடன், கரங்கள் கூப்பியபடி நீரின் மேற்பரப்பில் குப்புறப்படுத்த நிலையில் அவரின் சடலம் காணப்பட்டது.

காலஞ்சென்ற இப்பெண்ணிற்கும் சி. கிருஷ்ணபிள்ளை என்பவருக்கும் திருமணமாகி ஓராண்டுதான் பூர்த்தியாகியதென்றும், இம்மரணம் குறித்து எத்தகைய சந்தேகமும் தமக்கு இல்லையென்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. தாமோதரம்பிள்ளை முன்னிலையில் சாட்சியமளித்த பெண்ணின் பெற்றோரும், கணவனும் தெரிவித்தனர்.

மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். இப்பெண்ணின் சகோதரிகள் இருவரும் முன்பு இளம் வயதிலே கிருமிநாசினி அருந்தியே தற்கொலை செய்துகொண்டார்கள் என்று கூறப்படுகிறது.

# "வேறு எந்தத் தொகுதியிலும் நான் போட்டியிடமாட்டேன்"

## வதந்திகளுக்கு விளக்கம் கோரிய ஆதரவாளர்களுக்கு நவரத்தினம் உறுதி

சாவகச்சேரி, வெள்ளி

"சாவகச்சேரி தொகுதியை தவிர வேறு எந்தத் தொகுதியிலும் போட்டியிடமாட்டேன்" என்று சாவகச்சேரி எம். பி திரு. வி என். நவரத்தினம், அவரது இல்லத்தில் இன்று காலை கூடிய நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களிடம் வாக்குறுதியளித்தார்.

எதிர்வரும் தேர்தலில் சாவகச்சேரி எம். பி திரு நவரத்தினம், கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடுவாரென்று இன்று காலை வெளியான வதந்தி இங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. திரு நவரத்தினத்தின் ஆதரவாளர்கள் அதிகாலை முதலே அவரது இல்லத்தில் கூடத் தொடங்கிவிட்டார்கள். இவ்வளவு காலமும் தங்களுடன் அன்பாக ஒன்றுபட்டு இருந்து விட்டு வேறு தொகுதிக்கு போட்டியிட செல்ல வேண்டாமென்றும்

(2-ம் பக்கம் பார்க்க)

### தேர்தலுக்குப்பின்

# பிரிட்டிஷ் கயானாவில் அரசியல் நெருக்கடி

## பிரதமர் ஜகன் ராஜினாமா செய்ய மறுப்பு

ஜார்ஜ்டவுன், டிச. 11

பிரிட்டிஷ் கயானாவில் சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, அரசியலமைப்பு நெருக்கடி ஒன்று தோன்றிருப்பதால், பல இடங்களில் பிரிட்டிஷ் துருப்புக்களும், பொலிஸ் படையும் உஷாராக வைக்கப்பட்டிருக்கின்றன.

சட்டசபைத் தேர்தலில் தற்போதைய பிரதமர் டாக்டர் செட்டி ஜகனின் மக்கள் முன்னேற்றக் கட்சி 24 ஸ்தானங்களையும், எதிர்க்கட்சித் தலைவர் திரு பேர்ன்ஹாமின் மக்கள் தேசிய காங்கிரஸ் 22 ஸ்தானங்களையும் ஐக்கிய சக்திக்கட்சி 7 ஸ்தானங்களையும் பெற்றன.

டாக்டர் ஜகனுடன் எந்தக் கட்சியும் கூட்டுசேர மறுப்பதால் அவரால் அரசாங்கம் அமைக்க முடியவில்லை. பதிலாக எதிர்க்கட்சித் தலைவர் பேர்ன்ஹாமும் ஐக்கிய சக்திக் கட்சித் தலைவரும் தாங்கள் கூட்டுசேர்ந்து அரசாங்கம் அமைக்கத் தயாராக இருப்பதாக கூட்டறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். கவர்னரையும் அவர்கள் சந்தித்தனர்.

ஆனால் பிரதமர் ஜகன் ராஜினாமா செய்ய முடியாது என கவர்னரிடம் அறிவித்து விட்டார். தேர்தலில் மோசடி நடைபெற்றதாலேயே தமது கட்சி பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெறமுடியவில்லை என்றும், எனவே அரசியலமைப்பின்படி தாம் இன்னும் பிரதமராகவே இருப்பதாகவும் டாக்டர் ஜகன் கவர்னரிடம் கூறியிருக்கிறார். டாக்டர் ஜகனின் முடிவை கவர்னர் லண்டனுக்கு அறிவித்திருக்கிறார்.

கடந்த 8 வருடங்களாகப் பிரதம மந்திரியாக இருக்கும் டாக்டர் ஜகன் ஒரு இந்திய வம்சாவளியினர் ஆவார்.

## கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், சனி

சென்ற வியாழன் இரவு யாழ்ப்பாணம் ராணி தியேட்டருக்கு அருகாமையிலுள்ள ஒரு கடையில் ரூபா 300 பெறுமதியான சிகரெட், டோர்ச் பட்டரி போன்ற பொருட்கள் திருடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. கடையின் முன்புறக் கதவாலேயே இத்திருட்டு நடைபெற்றிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. இது சம்பந்தமாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கடற்றொழில் அபிவிருத்திக்கு

### ரூ. 40 கோடி கடன்

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் கடற்றொழில் அபிவிருத்திக்கென பிரிட்டிஷ் கம்பெனிகள் குழுவொன்று கடற்றொழில் கூட்டுஸ்தாபனத்திடம் ரூபா 40 கோடி கடன் வழங்கமுன்வந்துள்ளது. இதனை மந்திரி பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

## உலக படத்தொழிலில் இந்தியா 3ம் இடம்

புதுடில்லி, டிச. 11

வருடத்துக்கு 300 முழு நீளப் படங்களுக்கு மேல் தயாரித்து உலகப் படத்தொழிலில் 3ம் ஸ்தானத்தை இந்தியா வகிப்பதாக உத்தியோகபூர்வமில்லாத கணக்கெடுப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

## பக்ஷிகுலாம் விசாரணை

ஸ்ரீநகர், டிச. 11

காவலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதமர் பக்ஷி குலாம் முகமதுபற்றிய விசாரணை விரைவில் முடிவடையும் என காஷ்மீர் பிரதமர் திரு. சாதி கூறினார்.

## தூத்துக்குடி துறைமுகத்துக்கு வ. உ. சி. பெயர்?

கோவில்பட்டி, டிச. 11

தூத்துக்குடி துறைமுகத்துக்கு வ. உ. சிதம்பரனார் பெயர் வைக்கவேண்டும் என நடிகர் சிவாஜி கணேசன் கருத்துத் தெரிவித்ததை வ. உ. சி. யின் மூத்த மகன் திரு. வ. உ. சி. ஆறுமுகம் வரவேற்றுள்ளார்.

## நெல் விளைச்சல் சீராகும்

புதுடில்லி, டிச. 11

ஆசியாவில் நெல் விளைச்சல் நல்ல நிலையிலிருக்குமென சாம்ராஜ்ய பொருளாதார சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2-வது மகத்தான வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (அட்டன்)

தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத பக்தியை மூட்டி, தெய்வத்தின் நிலை அடைந்து தமிழர் உள்ளத்தில் வாழும் - பட்டினத்தார்



பிரபல பின்னணி பாடகர்

டி. எம். சௌந்தரராஜன்

எம். ஆர். ராதா

ஜெமினி சந்திரா

எஸ். ராமராவ்

எஸ். டி. சுப்புலக்ஷ்மி

எஸ். ஆர். ஜானகி

நடித்த

பட்டினத்தார்

சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 68ம் இலக்கத்திலுள்ள அலங்காரா அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.